



# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 14 | காலாண்டிதழ் ஏப்ரல் - ஜுன் 2020 | கதிர் - 2

# முன் வினையை அறுப்போம்; முகம் மலர்ச்சி அடைவோம்

மனித வாழ்க்கையில் முன்வினையை ஒட்டிதான் செயல்பாடுகளும் வாழ்க்கை அமைப்பும் உள்ளது. முன் ஜென்மத்தில் புண்ணிய பலன்கள் கூடி இருந்தால் அதற்கு தகுந்தபடி சுப பலன்கள் நடக்கும். பாவ பலன்கள் அதிகமிருந்தால், அதற்கேற்ப அசுப பலன்கள் இப்பிறவியில் நடக்கும். புண்ணிய, பாவ பலன்களைத் தவிர கர்ம வினை ஒன்று உள்ளது. கொடூரமான பாவங்கள் முன்ஜென்மத்தில் சூழ்ந்திருந்தால், அதன் விளைவாக தீர்க்க முடியாத கர்ம நோய்களான புற்று நோய், குஷ்டரோகம், வெண் குஷ்டம் போன்றவை நம்மை ஆட்டிப் படைக்கின்றன.

இதிலிருந்து விடுபடுவது எப்படி?

இதற்கு வழி என்ன?

என்ன செய்வது?


எங்கு செல்வது?

வாழ்க்கையை எவ்வாறு கையாளுவது?

தர்ம சங்கடங்களை தவிர்ப்பது எப்படி?

போன்ற பலவிதமான சந்தேகங்களும், விடை தெரியாத குழப்பங்களும் நம் மனதில் ஓடிக் கொண்டே இருக்கின்றன. இதற்கெல்லாம் விமோசனம் வேண்டாமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்; நன்றாக யோசிக்க வேண்டும்.

''தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்'' என்ற தத்துவத்தை உணர்ச்சிபூர்வமாக உனக்குள்ளேயே நீ ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீ யார்? உன் தலைவன் யார்? என்று ஆழ்ந்து யோசிக்க வேண்டும். வாழ்க்கை என்பது பலதரப்பட்ட சுகபோகங்களை உள்ளடக்கியது. அடுத்தவர்களைப் பார்த்து வாழாமல், நமது வருமானத்திற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.



“விரலுக்கு தகுந்துதான் வீங்க வேண்டும்''. வருமானத்திற்கு ஏற்றபடிதான் செலவும் இருக்க வேண்டும். அகலக்கால் வைப்பது என்றுமே ஆபத்தில்தான் முடியும். நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்றால் முன்வினை அகல வேண்டும். அகலவில்லை என்றால் பரிகாரம் செய்து நீக்க வேண்டும். எது போன்ற வினை உள்ளது? என்ன பாவம் செய்தோம்? என்பதை தெரிந்து கொள்ள சித்தர் தத்துவத்தை ஆராய வேண்டும். சித்தர்கள், ஜோதிடம், மருத்துவம், யோகம், வர்ம கலை போன்ற நெறிமுறைகளை வகுத்து, தொகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

மாயவலை வீசும் போக சித்தர்களிடம் மயங்காமல், மாட்டிக் கொள்ளாமல், தும்பைப்பூ போன்று தூய சிந்தனைகளை அருளாசிகளாக வழங்கும் உண்மை சித்தர்களை அடையாளம் கண்டு, தலைவனாக ஏற்றுக் கொண்டு, அவர் காட்டும் வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். சரணாகதி அடைய வேண்டும். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி செய்தால் நோய் அண்டாமல் உடல் பாதுகாக்கப்படும். உணர்வுகள் தளராமல் உள்ளம் பாதுகாக்கப்படும். மனது தெளிவு அடையும். ஆன்மீக சிந்தை மேலோங்கும். திறமை வெளிப்படும். குறையொன்றும் இல்லை என்ற நிலை ஏற்படும். உண்மையான சித்தர்களை அடையாளம் கண்டு கொள்ள மாடம்பாக்கம் 18 சித்தர்கள் சக்தி பீடத்தை நோக்கி நமது பயணம் தொடரட்டும். வரும் சித்ரா பௌர்ணமி அன்று நடக்க இருக்கும் மாபெரும் அகண்ட சித்தர் வேள்வியில் பங்கேற்று சரணடைவோம்! உண்மைத் தலைவனை அறிவோம்!!

முன்வினை நீங்கட்டும்! முகம் மலர்ச்சி அடையட்டும்!!

**அன்பர்கள் அனைவரும் ஆரோக்கியமாக வாழ, சார்வரி வருட தமிழ்ப் புத்தாண்டு அருளாசிகள்!**

வாழ்க வையகம்.

ஆசிகள்

குருஜி கே.வி.எல்.என். சர்மா

## சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழா 2019

கடந்த டிசம்பர் மாதம் 19, 20 தேதிகளில் மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆராதனை விழா வெகு சிறப்பாக நமது 18 சித்தர் பிருந்தாவனத்தில் கொண்டாடப்பட்டது. முதல் நாள் ஆராதனை விழாவில் சிறப்பு வாய்ந்த ஹோமங்களான **'ஸ்ரீ அபஸ்மாரஹர தட்சிணாமூர்த்தி ஹோமம்'** மற்றும் **'ஸ்ரீ மஹா மிருத்யுஞ்ஜெய ஹோமம்'** குருஜி ஸ்ரீ K.V.L.N சர்மா அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இந்த ஹோமங்களில் சுமார் 400 பக்தர்கள் கலந்து கொண்டு நன்மை அடைந்தனர். இரண்டாம் நாள் ஆராதனை விழாவில் (20.12.2019),





மஹான் ஆராதனையுடன் ஸ்ரீ தேவி திருக்கல்யாணம் வெகு விமர்சையாக நடைபெற்றது. பக்தர்கள் சிலர் 18 சித்தர் பிருந்தாவனத்தில் தங்களுக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவங்களையும் , மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் தங்கள் வாழ்வில் நடத்தும் அற்புத லீலைகளையும் ஆராதனையில் கலந்து கொண்ட மற்ற பக்தர்களோடு பகிர்ந்து கொண்டனர். பக்தி சிரத்தையோடு நடைப்பெற்ற இவ்விழாவின் தெய்வீகமான சூழலில் மஹானின் சாந்நித்தியம் வெகுவாக உணரப்பட்டது. இந்த ஆண்டின் புதுமையான முயற்சியாக ஆராதனை விழாவின் நேரடி ஒளிபரப்பு நமது ஆலயத்தின் பேஸ்புக் பக்கமான '18 Siddhar Brindavanam " என்ற பக்கத்தில் பதிவு செய்ய பட்டது. ஆலயத்திற்கு வர இயலாத பக்தர்கள் பயன் பெற குருஜி அவர்களின் அனுமதியோடு நடந்த இந்த நேரடி ஒளிபரப்பை பலரும் கண்டு களித்தனர்.

## ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி விழா 2020

மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி விழா கடந்த 16.01.2020 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜெயந்தி விழாவில் குருஜீ ஸ்ரீ K.V.L.N சர்மா அவர்களின் வழிநடத்துதலோடு 'ஸ்ரீ அகோராஸ்திர ஹோமம்' மற்றும் 'ஸ்ரீ ருத்ர ஏகதாசினி ஜப ஹோமமும்' நடைபெற்றது. துஷ்ட சக்திகளில் இருந்து விடுபடவும், மனித குலம் மேன்மை அடையவும் நடத்த பெற்ற இந்த ஹோமங்களில் எண்ணற்ற பக்தர்கள் பங்கு கொண்டு நற்பலன்கள் பெற்றனர். வருடா வருடம் நடை பெறுவதை போலவே இந்த ஆண்டு நடைபெற்ற ஜெயந்தி விழாவில் சௌபாக்கிய லட்சுமி பூஜை, தங்க பாதுகை பூஜைகள் நடைபெற்றன. இந்த பூஜைகளில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு ஐஸ்வர்யம் பெருகி பல நன்மைகள் உண்டாகின்றன. ஒவ்வொரு வருடம் நடை பெறுவது போல இந்த ஆண்டும் ஆராதனை மற்றும் ஜெயந்தி விழாக்களில் அன்னதானம் வெகு சிறப்பாக அமைந்தது.



ஜெயந்தி விழாவில் தொடங்கி(16.01.2020),ஒவ்வொரு மாதமும், மஹான் அவதரித்த நட்சத்திரமான ஹஸ்த நட்சத்திரத்தில், **வேத பாராயணத்துடன்** ஹஸ்த அபிஷேகம் நடை பெறுகிறது. ஹஸ்த அபிஷேகத்தில் மஹானுக்கு அபிஷேகம் செய்த விபூதி மிகவும் மகத்தானது. இந்த ஹஸ்த விபூதியை உட்கொண்டதால் பல பக்தர்கள் நோய்களில் இருந்து விடுபட்டுள்ளனர். ஜெயந்தி விழாவில் இந்த அனுபவத்தை நம் சித்தர் பிருந்தாவனத்தில் பக்தர் ஒருவர் பகிர்ந்துகொண்டதன் காணொளி நமது பேஸ்புக் பக்கமான '18 Siddhar Brindavanam' என்ற பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு வேத பாராயணம் மற்றும் ஹோமத்துடன் மாதம் தோறும் நடைபெறும் ஹஸ்த அபிஷேகத்தில் பக்தர்கள் பங்கு கொண்டு அனைத்து ஐஸ்வர்யங்களையும் பெற வேண்டுமாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்



## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

**ஏப்ரல்**

2 ஸ்ரீ ராம நவமி
7 பௌர்ணமி, ஹஸ்தம்
10 திருமாங்கல்ய பாக்ய திருநாள்
13 ஸ்ரீ சக்தி பீட கணபதி பிரதிஷ்டாதினம் - ஸ்ரீ வர கணபதி ஹோமம்
14 தமிழ் வருடப் பிறப்பு, விஷு
22 அமாவாசை
26 அக்ஷய திருதியை (அன்னதான மண்டபம் திறந்த தினம்)

**மே**

4 ஹஸ்தம்
7 சித்ரா பௌர்ணமி சித்தர் வேள்வி, பெருவிழா, சித்ரகுப்தர் பூஜை
22 அமாவாசை

**ஜூன்**

1 ஹஸ்தம்
4 வைகாசி விசாகம்
5 பௌர்ணமி
20 அமாவாசை
27 கும்பாபிஷேக தினம்
28 ஹஸ்தம்

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்


**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**

அமைந்துள்ளது.
முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
8754486723
பாலாலயம் : 2228 1337
Website : www.seshadri.info
விஜயம் செய்து விபரம் பெறுங்கள்!
பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த**
**சேஷ ஒளி வாசகர்களே**

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.




அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 044 2493 8734, 2493 8735, 2495 3793

# சித்த சைத்தன்யம் - பகுதி ஒன்று

நம் மாடம்பாக்கம் 18 சித்தர் பிருந்தாவனத்தில் கருணையின் ஸ்வரூபமாக புனர் அவதாரம் எடுத்து, எழுந்தருளியிருக்கும் 18 சித்தர்களையும் குருநாதர் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளையும் வணங்கி இந்த தொடரை துவங்குகிறோம்.

குருஜி ஸ்ரீ K.V.L.N சர்மாஜி, அவர்கள் நம் மாடம்பாக்கம் ஸ்ரீ சக்திபீட பிருந்தாவனத்தின் பக்தர்களும் சித்தர்களின் சீடர்களும் இங்கு எழுந்தருளியிருக்கும் சித்தர்களின் மகத்துவத்தையும், அவர்களை வணங்குவதால் உண்டாகும் நன்மைகள் யாது என்பதும், அவர்களை வழிபடும் முறைகள் பற்றியும் தெரிந்து கொண்டு, நன்மைகள் பல பெற வேண்டும் என்று எண்ணி, இனி வெளியாகும் ஒவ்வொரு சேஷ ஒளி இதழிலும், ஒவ்வொரு கிரகத்தையும் பிரதிபலிக்கும் 2 சித்தர்களை பற்றி ஒரு கட்டுரை பிரசுரிக்க அறிவுறுத்தினார்.

இந்த தொடரின் முதல் கட்டுரையாக ஸ்ரீ சிவ வாக்கிய சித்தர் மற்றும் ஸ்ரீ கயிலாய கம்பளி சட்டைமுனி சித்தர் ஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் மகத்துவம், இந்த இரு சித்தர்களை வேண்டுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி தொகுத்து வழங்கி இருக்கின்றோம்.

நமது சக்திபீட பிருந்தாவனத்தில் பல தேவதைகளின் சன்னதிகள் இருக்கின்றன. ஆனால் இங்கு நவக்கிரஹங்களுக்கு சன்னதி இல்லை. காரணம், இங்கு அருள்பாலிக்கும் 18 சித்தர்கள் 9 நவக்கிரஹங்களை பிரதிபலிக்கின்றனர் . ஸ்ரீ சிவ வாக்கிய சித்தர் ஸ்வாமிகளும், ஸ்ரீ கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர் ஸ்வாமிகளும் இங்கு பிரதிபலிக்கும் நவக்கிரஹம் சந்திர பகவான் ஆவார்.

**ஸ்ரீ சிவ வாக்கிய சித்தர் :**

1. 'சிவ சிவ' என்று சொல்லிக்கொண்டே அவதரித்த குழந்தை என்பதால் இவர் சிவவாக்கியர் என்ற பெயர் பெற்றார். இவர் வேறு சிவன் வேறு அல்ல என்பதே உண்மை நிலை. அதனால் தான் இவரின் சன்னதியில் இவருக்கு வாகனமாக நந்திதேவர் இருப்பதை காணலாம்.



2. காசியில் இவர் குருநாதரின் கட்டளைக்கு இணங்க கங்கையில் காசுகளை ஒப்படைத்து, பின் அந்த கங்கையை அவருடைய குருவின் தோல்ப்பை தண்ணீரில் வரவழைத்து, தான் கொடுத்த காசுகளை மீண்டும் பெற்று, அவர் குரு நடத்திய பரீட்சையில் தனது பரிபக்குவத்தை வெளிப்படுத்தினார்.

3. நற்பண்புகள் நிறைந்த ஒரு நரிக்குறவ பெண்ணை, இவரது குரு, இவரின் இல்லாள் ஆக்கினார்.

4. மூங்கில் வெட்டும் தொழிலை செய்த இப்பெருமான் ஒரு நாள் மூங்கில் வெட்டும் பொழுது அதிலிருந்த தங்க துகள்கள் வெளி வருவதை கண்டு 'எமன் வருகிறான் எமன் வருகிறான்' என்று கூறிய படி அந்த தங்கத்தை அங்கேயே விட்டு விட்டுச்சென்றார். அதே போல அங்கு வந்த வேறு சிலர் அந்த தங்கத்திற்காக ஆசைப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கி உயிரிழந்தனர்.

5. இவரை கண்டு உவகைகொண்ட கொங்கணவ சித்தர், இவரின் வறுமையை போக்க எண்ணி, இவரின் வீட்டில் இருந்த சிறு இரும்பு துண்டுகளை எல்லாம் பொன்னாக மாற்றி இவருடைய இல்லாளிடம் கொடுத்தார். ஆனால் அந்த பெண் தெய்வம் அவருடைய கணவரான சிவவாக்கியர் பெருமான் அறிவுறுத்தியது போல அவற்றை கிணற்றில் வீசினார்.

6. இந்த பெருமானுக்கு இரும்பையும், மற்ற எந்த ஒரு உலோகத்தையும் பொன்னாக்கும் ரசவாதம் தெரிந்திருந்தது. இந்த அரிய ரசவாத ரகசியத்தை இவரிடமிருந்து கற்று தங்கள் வறுமையை போக்கி கொள்ள எண்ணி பலரும் இப்பெருமானை நாடினர். இப்பெருமான் அவர்களிடம் 'அன்பர்களே! உங்கள் பொருளாசையை ஒழியுங்கள். சித்தத்தை சிவனிடம் வையுங்கள். பிறகு நீங்களே தங்கமாக ஆவீர்கள்' என்று அவர்களின் அறியாமையை போக்கினார்.

7. 4700 வருடங்கள் வாழ்ந்த இப்பெருமான் பாடிய பாடல்களில் ராம ஜெயமும் உண்டு, சிவகீர்த்தனையும் உண்டு. இவரது வாகனம் நந்திகேஸ்வரர்.

**ஸ்ரீ கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர்:**

1. அஷ்டமா சித்திகள் பெற்ற இந்த சித்தர் ரோம் நகரிலிருந்து வந்திருப்பதால் இவருக்கு ரோமா ரிஷி என்று பெயர். இவர் உடல் முழுவதும் ரோமங்கள் நிறைந்து இருந்ததாலும் இவர் ரோம ரிஷி என்று காரணப் பெயர் பெற்றார்.

2. இந்த பெருமான் கைலாயம் போன்ற குளிர் பிரதேசங்களில் சஞ்சரிப்பவர் என்பதால் நாம் இப்பொருமானின் சன்னதியில் கம்பளி வைத்திருப்பதை காணலாம்.



3. கும்பகோணத்தை அடுத்த கூந்தலூரில் இப்பெருமான் தவம் செய்யும் பொழுது இவரை தரிசிக்க வந்த ஏழை எளியவர்கள் மேல் கருணை கொண்டு தன் தாடியின் வழியே தங்கம் சொரிந்து தந்தருளினார்.

4. ஒரு நாள் இவரின் தாடியில் தங்கம் வருவது நின்று விட, அவர் தாடியை மழித்து நீக்கிவிட்டு, நீராடாமல் சிவபெருமானை காணச்சென்றார். நீராடாமல் சிவ பெருமானை காண வந்திருக்கும் இந்த சித்தரை, விநாயக பெருமானும், முருக பெருமானும் கோவிலுக்குள் அனுமதிக்க மறுத்தனர்.இதனால் ரோமரிஷி மனம் கலங்கி கோபுர வாசலில் நின்ற படியே சிவபெருமானை விளித்து பாட சிவ பெருமான் இவரது புற அழுக்கை புறக்கணித்து இவரின் அகத்தூய்மையை மெச்சி இவர் முன் ஒளி வடிவமாக காட்சி கொடுத்தார்.

5. இவரின் வாழ்நாள் கணக்கிட முடியாதது. கருணையின் கடலான இந்த பெருமான் காக புஜண்ட சித்தரால் பூஜிக்கப்பட்டவர்.

சிவ வாக்கிய சித்தர் மற்றும் கைலாய கம்பளி சட்டைமுனி சித்தரை வணங்குவதால் அடையும் நன்மைகள்:

சந்திர கிரஹத்தை பிரதிபலிக்கும் இந்த சித்தர் பெருமான்கள், ஜாதகத்தில் உள்ள சந்திர கிரஹ தோஷங்களை நீக்குபவர்கள்.

மன வியாதி, மன அழுத்தம், மன புழுக்கம் அகன்று மன நிம்மதி அடையலாம்

முக்கிய முடிவுகள் எடுப்பதில் குழப்பங்கள் நீங்கும்.

சஞ்சல புத்தி நீங்கும்

படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை மாறுதல் அடையும்.

தாயார் சம்பந்த பட்ட பிரச்சனை அகல, தாய்-மகன்/மகள் பிரச்சனைகள் நீங்கி, குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்

**வழிபடும் முறை :**

தேக சுத்தியுடன் அழகிய சிறு பலகையில் மஞ்சளிட்டு மெழுகி கோலமிட்டு, சித்தர்களின் படங்களை வைத்து, மஞ்சள் குங்குமம் இட்டு, அலங்கரிக்கப்பட்ட குத்து விளக்கினை ஏற்றி, ஒவ்வொரு சித்தருக்கென தனியே கூறப்பட்டிருக்கும் தியானச் செய்யுளை கூறி, பின்பு அவர்களுக்கு உகந்த மலர்களால் அந்த சித்தர் பெருமானுக்கு உரிய போற்றிகளை கூறி அர்ச்சித்து மனமுருகி பிரார்த்திக்க வேண்டும்.

ஒவ்வொரு சித்தருக்கும் தனித்தனியே தியானச் செய்யுளும், 16 போற்றிகளும் உள்ளது. இதை நம் அலுவலகத்தில் உள்ள '18 சித்தர்கள் பிருந்தாவன சக்தி பீட பூஜை முறைகள்' புத்தகத்தில் காணலாம். இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ள இந்த செய்யுள் மற்றும் போற்றிகளை கூறி சித்தர் பெருமக்களை வணங்குவது சிறந்தது.

**சிவ வாக்கிய சித்தர்:**

அர்ச்சனைக்கு உகந்த மலர்கள் - சங்கு புஷ்பம் / தும்பை புஷ்பம் / வில்வம். நைவேத்தியம் - தண்ணீர், பழம், சுத்தமான விபூதி

**கைலாய கம்பளி சட்டைமுனி சித்தர்:**

அர்ச்சனைக்கு உகந்த மலர்கள் - ஜாதி புஷ்பம், மல்லிகை புஷ்பம் அல்லது வில்வம். நைவேத்தியம் - தண்ணீர், பழம், இஞ்சி இல்லாமல் மிளகு சீரகம் சேர்த்து குழைவாக செய்த வெண்பொங்கல்.

இந்த இரண்டு சித்தர்களும் சந்திர கிரஹத்தை பிரதிபலிப்பதால் இவர்களுக்கு வெள்ளை வஸ்திரம் உகந்தது. பூஜிக்க சிறந்த நாள் - திங்கட்கிழமை.

பக்தியும் அன்பும் ததும்ப, சித்தர்களை வழிபடும் பக்தர்கள், சித்தர்களின் சாந்நித்யமும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடத்தும் அற்புத லீலைகளையும் உணர்கின்றனர். சக்திபீட பிருந்தாவனத்தின் பக்தர்கள் நம் அலுவலகத்தில் விற்கப்படும் சித்தர்களின் படங்களும் பூஜை முறை புத்தகத்தையும் பெற்றுச்சென்று தங்கள் இல்லங்களில் சித்த புருஷர்களை பூஜித்து சகல நன்மைகளும் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது (தொடரும்)

*எமது வெளியீடு : ''18 சித்தர்கள் பூஜை முறைகளிலிருந்து'' தொகுப்பு*

**கங்கா வினோத்**

உ

ஸ்ரீ சக்தி பீட மஹா கணபதி துணை, ஸ்ரீ ஸத்குரு துணை

# ஸத்குருவும் நானும்
# (4) அற்புதம் நிகழ்த்திய ஆன்மீகச் செல்வர்

சோதனைகள் பல கடந்து, ஸத்குருவின் சூட்சும வழிகாட்டுதலில், குருசேவையில் தன்னலமின்றி தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, உலகம் உய்வதற்கு, ஒரு தன்னிகரற்ற, தனித்தன்மை வாய்ந்த, ஜாதி, மத, பேத , இன, மொழி வேறுபாடின்றி வழிபடக் கூடிய திருத்தலத்தை சித்தபூமி மாடம்பாக்கத்தில் அமைத்தவர் குருஜி ஸ்ரீ கே.வி.எல்.என். சர்மா அவர்கள். எவ்வாறு? தனது உறுதியான ஆன்மீக ஜோதிட கலையில் திறமையினாலும், அடியேனைப் போன்ற சாமான்யர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் பலவற்றை தீர்த்து வைத்து, ஓர் உன்னத ஸத்குருவை அடையாளம் காட்டி, ஸ்ரீசேஷ குடும்பத்துடன் இணைத்து வைத்து, சிறு சிறு கருவிகளாக்கி, வழிநடத்திச் சென்று, இந்தச் சக்திபீடத்தை உருவாக்கினார். குருஜியின் அரவணைக்கும் வழிகாட்டுதல் இன்றும் தொடர்கிறது.

சுமார் 24 வருடங்களுக்கு முன்பு, ஸத்குருவின் தாயன்பு மிகுந்த கருணையினால் ஒரு நல்ல திருப்பம் அமைந்து, அடியேனின் வாழ்க்கை, ஸத்குருவின்/குருஜியின் அரவணைப்பில் ஒரு சீரான பாதையில் சென்று கொண்டிருந்தது. ஜூலை 2002-இல் ஒரு தனியார் நிறுவனத்திற்கு மஹானின் ஆசியுடன் வேலை மாற்றம் செய்து கொண்டேன். சுமார் நான்கரை ஆண்டு காலம் கடந்தது. இந்த காலத்தில்தான் சில பாதைத் தடைகளை சந்திக்க வேண்டியிருந்தது. தேவையற்ற மன உளைச்சலுக்கு உள்ளான சமயமும் இதுதான்.

1-1-2007 அன்று, குருஜியுடன், சற்று நேரம் எடுத்துக் கொண்டு, அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். புத்தாண்டு நலம் தெரிவித்துவிட்டு, எனது தொழில் முறையில் (Profession) ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை எடுத்துரைத்தேன். வேலையை விட்டு விலகுவதற்கான மனப்பான்மையில் இருப்பதாகக் கூறினேன். குருஜி என்னை சற்று நிதானப்படுத்தினார். ஒரு உயர்ந்த ஆசானாக, பிரச்சனைகளுக்கு, மன அழுத்தத்திற்கு நானும் ஒரு காரணமாக இருப்பதை தெளிவாக சுட்டிக் காட்டினார். நிகழவிருக்கும் ஸத்குரு ஆராதனை விழாவில் (7, 8, 9 ஜனவரி 2007) முழு மனதுடன் கலந்து கொள்ளுமாறும், ஒரு நல்ல வழி கிடைக்குமென்றும், வேலையை தற்பொழுது விட வேண்டாமென்றும் வாஞ்சையுடன் அறிவுறுத்தினார். குருஜி கூறியபடி, 2 நாட்கள் அதிகமாக விடுப்பு (Leave) எடுத்துக் கொண்டு, ஆராதனை விழா ஏற்பாடுகளில் மனதை முழுமையாக செலுத்தினேன். விழாவில், மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு கலந்து கொண்டேன்.

ஆராதனை விழா 2ஆம் நாளன்று, காலை நேர வேள்வி பூர்ணாஹூதியுடன் நிறைவு பெற்றது. மதியம் சுமார் 1.30 மணியிருக்கும். எனது நண்பர் ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்புவந்தது. ஒரு பரஸ்பர நண்பரை உடனே தொடர்பு கொள்ளுமாறு கூற, தொடர்பு கொண்டேன். அந்த நண்பர் என்னிடம் மஸ்கட்டில் (மத்திய கிழக்கு-ஓமான் தேசம்) ஒரு நல்ல வாய்ப்பு உள்ளதாகவும், அங்கு செல்வதற்கு விருப்பம் இருக்கிறதா எனவும் வினவினார். எனக்கு மின்னலடித்த உணர்வு. குருஜியின் தொலை நோக்கு அறிவுறுத்தல் ஞாபகத்திற்கு வந்தது. விருப்பத்தை உடனே தெரிவித்தேன். நண்பர் கேட்டபடி எனது தொகுசாரத்தை (Resume) அனுப்பி வைத்தேன்.

ஒரே வாரத்தில் குறிப்பிட்ட நிறுவனத்தின் பொது மேலாளர் என்னிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். மூன்று அமர்வுகள் (Sessions) தொலைபேசி மூலம் பேச்சு வார்த்தை நடந்தது. குருஜியிடம் ஜாதக ரீதியாக ஆலோசனை செய்தேன். குருஜியும் வெளிநாட்டில் வேலை கிடைக்கும் தருணம் தான் என்று ஊர்ஜிதம் செய்தார். வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும் கூறினார்.

பிறகு மஸ்கட்டிலேயே நேர்முகக் காணலுக்கு (Interview) அழைப்பு வந்தது. **அழைப்பு வந்த நாள் மஹானின் ஜெயந்தி விழா அன்று (பிப்ரவரி 2007) மதியம், வேள்வி பூர்த்தியான சமயம். தற்செயல் அல்ல, (அவர்) தம் செயல் என்பதை ஸத்குரு உணர்த்தினார்.** அன்று, சூட்சுமப் பிரவேசத்தில், அவரது அருளால் கிடைக்கும் இவ்வாய்ப்பை எவ்வித தயக்கமுமில்லாமல் எடுத்துக் கொள்ளுமாறும் திருவாய் மலர்ந்தருளினார். அடுத்த 5 தினங்களில், மஸ்கட் சென்றடைந்து, அந்த நிறுவனத்தின் மேலதிகாரிகளை சந்தித்தேன்.

10 நாட்களுக்கு பிறகு, நியமனக் கடிதம் (Appointment Letter) கிடைக்கப் பெற்றேன். ஸத்குருநாதரின்/குருஜியின் ஆசிகளுடன், ஒப்புதல் தெரிவித்தேன். குருஜி சொன்னபடி, ஒரு நல்ல நாளில் இங்கிருக்கும் வேலையிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை சமர்ப்பித்தேன்.

மஸ்கட்டிற்கு செல்வதற்கு முன், தமிழ்ப் புத்தாண்டு அன்று ஸ்ரீ சக்தி பீட மஹா கணபதியிடம் (விசா கணபதி) தேங்காய்ப் பிரார்த்தனை செய்து கொண்டேன். ஸ்ரீ சூலினி துர்காவை வழிபட்டு விட்டு மூலாலய சக்தி பீட தெய்வங்களை தரிசனம் செய்து கொண்டேன். குருஜி, குரு மாதாவின் ஆசிகளைப் பெற்றேன். அப்பொழுது குருமாதா கூறியது ''தைரியமாக கிளம்புங்கள். லக்ஷ்மியையும் (எனது துணைவியார்), குழந்தைகளையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என. அன்னை பராசக்தியே அருளாசியுடன் அனுப்பி வைப்பது போல் தோன்றியது.

சுமார் 10 வருட காலம், மத்திய கிழக்கு நாடுகளில் (மஸ்கட் மற்றும் துபாய்) நல்ல நிலையில் பணி புரிந்து விட்டு ஸத்குருவின்/குருஜியின் ஒப்புதலுடன், சென்னை திரும்பினேன். ஸத்குரு, அள்ளிக் கொடுத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, குருசேவை பயணத்திலும் அடியேனுக்கு ஒரு சிறிய பகுதியையும் தந்தருளினார்.

''அற்புதம் நிகழ்த்திய, நிகழ்த்தும் ஆன்மீகச் செல்வரே போற்றி போற்றி''.

(தொடரும்)

**முரளி சுந்தரம்**

# தெய்வ நைவேத்தியங்களும் அற்புத பலன்களும்.

இறைவனை வழிபடும் பக்தியை இரண்டு வகைகளாக பிரிப்பது உண்டு. அவை சகுண பக்தி, நிர்குண பக்தி எனப்படும். சகுண பக்தி எனப்படுவது இறைவனை உருவ வழிபாடு செய்வது (Idol), நிர்குண பக்தி என்பது இறைவனை ஒரு உருவமாக (Idol) பாவிக்காமல் அரூபமாக வழிபடுவது. இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. சாதுக்கள் மற்றும் மஹான்களால் நிர்குண பக்தியை எளிதில் உணர முடிகின்றது . சாமானிய மானுடர்களும் அந்த நிலையை அடைய சகுண பக்தி உதவுகிறது. சகுண பக்தியின் அடிப்படை தெய்வ விக்கிரஹங்களை ஆராதனை செய்வது. இப்படி வழிபடும் பக்தர்கள் வழிபடப்படும் மூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம் செய்து தங்கள் பக்தியை வெளிப்படுத்துகின்றனர். உண்மையில் சகுண பக்தி பாவம் என்பது, அந்த மூர்த்திகளை சிலைகளாக பாவிக்காமல் இந்த விக்கிரஹங்களில் அந்த தேவதைகள் வாழ்கிறார்கள் என்பதை உணர்வதே. நாம் உண்ணும் உணவு , உடுத்தும் உடை, நம் சூழலை தூய்மையாக வைத்துக்கொள்வது போல பூஜை செய்யப்படும் மூர்த்திகளுக்கு முறையாக நல்ல பொருட்கள் கொண்டு அபிஷேகம், தூய்மையான வஸ்திரம், தூய்மையான, சுவையாக பக்குவப்படுத்த பட்ட நைவேத்தியம் செய்வது அவசியம். காரணம், விக்கிரஹங்களில் உறைந்திருக்கும் தேவதைகள் நாம் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு நைவேத்தியம் மற்றும் உபசாரங்களை ஏற்கின்றனர். எனவே இவற்றில் மிகுந்த சிரத்தை வேண்டும் என்று நம் ஆலயத்தைக் கட்டியவர் குருஜி ஸ்ரீ K.V.L.N. சர்மாஜி அவர்கள் பல முறை எடுத்து உரைத்திருக்கின்றார்.

கருணைக்கடலான மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் குருஜீயின் மூலமாக சூட்சும ப்ரவேசத்தில் பேசும் பொழுது ஒவ்வொரு தெய்வ பிரசாதத்திற்க்கும் ஒரு தனி மகத்துவம் உள்ளது. அவற்றில் பல தெய்வீக ரகசியங்கள் அடங்கி இருக்கின்றன என்று பல முறை கூறியிருக்கின்றார். பிள்ளையாருக்கு கொழுக்கட்டை, அம்பாளுக்கு வடை, புட்டு என்று தனித்தனியாக ஒவ்வொரு தேவதைகளுக்கும் ப்ரீதியான நைவேத்தியங்கள் இருக்கின்றன. நமது 18 சித்தர் சக்தி பீட பிருந்தாவனத்தில் உள்ள அனைத்து தெய்வ சன்னதிகளும் மஹான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் சூட்சும ப்ரவேசத்தில் அறிவுறுத்தியது போல தினமும் நைவேத்தியம் செய்து அதை பிரசாதமாக பொது மக்களுக்கும் விநியோகம் செய்கின்றோம். இதை தவிர்த்து அமாவாசை, பௌர்ணமி, ஹஸ்தம் போன்ற முக்கிய தினங்களில் விசேஷமாக அனைத்து தேவதைகள் மற்றும் சித்தர்களுக்கும் நைவேத்தியம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு சித்தருக்கும் உகந்த நைவேத்தியம் என்ன என்பதை சத்குரு ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள், குருஜீ ஸ்ரீ K.V.L.N. சர்மாஜி அவர்கள் மூலமாக சூட்சும ப்ரவேசத்தில் 35 ஆண்டுகள் முன்னமே அறிவுறுத்தியிருக்கிறார் . சில மாதங்களுக்கும் முன்பு வந்த ஒரு அமாவாசையில்,சித்தர்கள் நைவேத்தியத்தை வீட்டில் செய்து சித்தர்களை வணங்கும் வீடுகளில் நினைத்த நல்ல காரியங்களும் , நினைக்காத நல்லவைகளும் நடக்கும் என்றும் அருள் பாலித்தார். சித்தர்களுக்கு மிக எளிமையான நைவேத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக சிவ வாக்கிய சித்தருக்கு விபூதி, அழுகணி சித்தருக்கு 4 முறை அரிசி களைந்த நீர் நைவேத்தியமாக சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு பக்தியோடு செய்யப்படும் தெய்வ நைவேத்தியங்கள் உடல் மற்றும் உள்ளத்தில் உள்ள பிணிகளுக்கு அருமருந்தாக செயல்படும்.

18 சித்தர்களின் படம் மற்றும் 18 சித்தர்கள் பூஜை முறை புத்தகம் ஆலய அலுவலகத்தில் விற்கப்படுகின்றது. சித்தர்கள் பூஜை முறைகள் மற்றும் நைவேத்தியம் பற்றி தெரிந்து கொள்ள இப்புத்தகத்தை வாங்கி படித்து பயன் பெறுக . தங்கள் வீடுகளில் சித்தர்களை பக்தி சிரத்தையோடு பிரார்த்தனை செய்து பல நன்மைகள் உண்டாவதை உணர்ந்த பக்தர்கள் ஏராளம். வீடுகளில் இவற்றை செய்ய இயலாத பக்தர்கள் கோவிலில் செய்யப்படும் தெய்வ நைவேத்தியங்களுக்கு பொருளாகவோ பணமாகவோ தங்களால் இயன்ற உதவி செய்து நன்மை பெறலாம்.

**- கங்கா வினோத்**

# 'அதிர்ஷ்டம் யாருக்கு இருக்கோ?'

திருவண்ணாமலை நிறைய கடைகளில் இன்றும் சேஷாத்திரி ஸ்வாமிகள் படம் இருக்கும். அதற்கு முதலில் கற்பூரம் காட்டி வணங்கி விட்டு தான் வியாபாரம் ஆரம்பிக்கும். அவர் இருந்த காலத்தில் எப்போது எந்த கடைக்குள் நுழைவாரோ தெரியாது. பார்த்தவை எல்லாவற்றையும் எடுத்து வீசுவார். காசு வைக்கும் கல்லா பெட்டியை திறந்து அலசுவார். காசை எடுத்து இறைப்பார். சென்று விடுவார். ஒரு நாளைக்கு ரெண்டு மூணு கடைகளாவது அவரால் விஜயம் செய்யப் படும். அன்று அந்த வியாபாரிக்கு அமோகமாக வியாபாரம் நிகழும். ஒவ்வொருவரும் தினமும் வரிசையாக கடை வாசலில் நின்று கொண்டு அவர் வருகிறாரா என்று பார்ப்பார்கள். வணங்கி வரவேற்பார்கள். அவர் லக்ஷியம் செய்யாமல் சென்று கொண்டிருப்பார். எப்போது தோன்றுமோ? எந்த கடையோ ? அது பாக்கியம் செய்தது.

அப்படி பாக்யம் செய்த ஒரு கடை முத்தியாலு செட்டியார் கடை. அடிக்கடி அதற்குள் செல்வார். செட்டியாருக்கு ரெண்டு கடை. ஒன்று மளிகை கடை. இன்னொன்று துணிக்கடை. கற்பூரத்தை மட்டும் தானே வியாபாரம் செய்வார். அவர் கொடுக்கும் காலணா கற்பூரம் மற்ற கடைகளில் எட்டணாவுக்கு கிடைக்கும் அளவுக்கு அதிகமாகவே கொடுப்பார்.

''செட்டியார், எதற்கு நிறைய கற்பூரம் தருகிறீர்கள். நஷ்டம் இல்லையா?'' என கேட்டால்

''ஏண்டா, முட்டாப்பயலே, கற்பூரத்தை திங்கவா முடியும். அருணாசலேஸ்வரனுக்கு நிறைய நம்மிடமிருந்தே போகட்டுமே! புண்யமில்லையா?''என்பார். கோபம் வராது. கடையில் வேலை செய்பவர்கள் திருடினாலும் வேலையிலிருந்து நீக்க மாட்டார்.

''மடையா இனிமே இப்படி பண்ணாதே'' என்பதோடு சரி.

சாதாரணமாக சொல்ப பணத்தில் ஆரம்பித்த செட்டியார் கடை சேஷாத்திரி ஸ்வாமிகள் நுழைந்தவுடன் பல லக்ஷங்கள் கொண்ட கடையாகி விட்டது .

ஒருநாள் சுவாமி திடுமென செட்டியார் மளிகை கடைக்குள் நுழைந்தவர் கண்ணில் ஒரு நெய் டப்பா பட்டுவிட்டது. அதை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டுவந்து தெருவெல்லாம் நீர் தெளிப்பது போல் தெளித்து காலியாக்கி டப்பாவை கடைக்குள் எறிந்துவிட்டு போனார். செட்டியார் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டு சும்மா நின்றார். என்ன ஆயிற்று தெரியுமா? முன்னூறு ரூபா நெய் போனாலும் ஆச்சர்யமாக அன்று மாலை வெகு வருஷமாக ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு கடன்காரன் கொடுக்க வேண்டிய பாக்கி வட்டி எல்லாமாக சேர்த்து எழுநூற்றி ஐம்பது ரூபாயை மூட்டை கட்டி கொண்டு வந்து கொடுத்தான். அது வராது என்று எள்ளும் நீரும் செட்டியார் எப்போதோ பல வருஷங்களுக்கு முன்னால் இறைத்து விட்டாரே. இதற்கு ஸ்வாமிகள் செயலே காரணம் என்று நம்பினார்.

துணிக்கடைக்குள் ஒரு நாள் சென்று எல்லாவற்றையும் பார்த்தவர் ஒரு விலையுயர்ந்த ஜரிகை வேஷ்டியை கையில் எடுத்து பார்த்துக்கொண்டே இருந்தவர் திடீரென அதை நார் நாராக கிழித்துவிட்டார். அந்த கிழிந்த ஜரிகை வேஷ்டி துண்டுகளை எச்சம்மா வீட்டுக்கு போய் அங்கிருந்த எருமை பசு கொம்புகளில் கட்டி விட்டார்.

செட்டியாருக்கு அன்று ரெண்டாயிரம் ரூபாய் லாபம். வேஷ்டி இருநூற்று எண்பது ரூபாய் தானே.

ஒருதடவை ஒரு மாம்பழக் கடை வாசலில் மலைபோல் மாம்பழங்கள் குவிந்திருந்தது ஸ்வாமிகள் கண்ணில் பட்டவுடன் வேகமாக போய் ஒரு மாம்பழத்தை எடுத்தார். கடைக்கார முதலாளி இல்லை. இருந்திருந்தால் அப்படியே விழுந்து வணங்கி இருப்பார். இருந்தவனோ புதிதாக ஒரு வேலையாள். அவன் ஸ்வாமியை வார்த்தைகளால் திட்டி அவர் கையிலிருந்த பழத்தை பிடுங்கி வைத்துக் கொண்டான். அவர் போய் விட்டார்.

ரெண்டு மூன்று தினங்கள் ஆகியும் ஒரு பழம் கூட விற்காமல் மலைபோல் இருந்த அத்தனை பழங்களும் அழுகி நாசமானது தான் மிச்சம். ஊரெல்லாம் பல மாதங்கள் இதே பேச்சு.

முருகன் ஒரு மாட்டு வண்டி வைத்து ரயிலடிக்கு சவாரி ஓட்டுவான். திருவண்ணாமலை சாது சத்திரம் பக்கத்தில் அவன் ஓட்டு வீடு.

ஒருநாள் சுவாமி அந்த பக்கமாக நடந்து வந்தவர் அவன் வீட்டில் புகுந்து விட்டார். முருகன் அம்மா உண்ணாமலை அவரை வரவேற்றாள்.

''பசிக்குது. கூழு வச்சிருக்கியா. குடு''

''ஒரு மிடாவில் இருந்த கூழை மோர் விட்டு கலக்கி ஒரு பெரிய பாத்திரத்தில் உப்பு போட்டு கொடுத்தாள் . முழுதும் குடித்துவிட்டு ''இன்னும் கொஞ்சம்'' என்கிறார்.

ரெண்டாவது தடவையும் பாத்திரம் முழுதும் குடித்தார்''

''டே முருகா எழுந்திருடா சாமி வந்திருக்கு கும்பிடு '' என்று திண்ணையில் தூங்கிய முருகனை எழுப்பினாள் .

தூக்க கலக்கத்தில் அவன் எழுந்து ''தூங்கிட்டேன் சாமி'' என வணங்கினான்

''ஏன் வண்டி ஓட்டலை இன்னிக்கு?''என்கிறார்.

''வியாபாரம் இல்லை சாமி. மாட்டுக்கு தீனி வாங்க கூட காசு போதலை. வண்டியிலே ரிப்பேர் இருக்கு. சரி பண்ண வழியிலேயே சாமி. ஒன்னும் தெரியாம முழிக்கிறேன்''

''நாளைக்கே வண்டியை மாட்டை வித்துடு. உனக்கு இனிமே அது வேண்டாம். உடனே வித்துடு'' என்று சொல்லிவிட்டு போனார்.

முருகன் அன்றே ஒரு ஆசாமியிடம் வண்டியையும் மாட்டையும் கை மாற்றி விட்டான்.

ஒரே வாரத்தில் முருகனுக்கு கல்யாணம் ஆச்சு. வெகு வருஷங்களாக பார்க்காத ஒரு நெருங்கிய உறவுக்காரர் தனது ஒரே பெண்ணை முருகன் வீடு தேடி வந்து நிச்சயம் பண்ணி கல்யாணம் நடந்தது. சென்னையில் ஒரு இடத்தில் வசதியான குடும்பம். பல ஆயிரங்கள் மதிப்புள்ள (இப்போது லக்ஷமோ கோடியோ) அந்த சொத்துக்கு முருகன் தான் அதிபதி. நிறைய நகைகள் வேறு. உண்ணாமலையின் கூழுக்கு இப்படி ஒரு பரிசா!!

J K Sivan.

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**நித்திய அன்னதானம் :**

பிறந்த நாள், திருமண நாள், அறுபதாம் கல்யாண நாள், நீத்தார் நினைவு நாள் ஆகிய தினங்களில் அன்னதானம் செய்து பலன் அடையுங்கள். வடை பாயசத்துடன் ஒரு நாளைக்கு அன்னதானம் ரூ. 2750/- நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**
**அன்னதானம் செய்வோம்**
**ஆனந்தம் அடைவோம்**

**இலவச மருத்துவமனை**

**பொருளாகவோ, மருந்துகளாகவோ**
**நன்கொடை அளித்து**
**நோயற்ற வாழ்வு பெறுங்கள்!**

## பக்தர்களின் கவனத்திற்கு!

தவிர்க்க முடியாத காரணங்களினால், இந்த இதழில் குருஜி எழுதும் ராசி பலன்கள் வெளியிட இயலவில்லை. கடினமான சூழ்நிலைகளினால் சக்திபீடத்தில் பொதுமக்கள் கலந்து கொள்ளும் விழாக்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, நித்ய பூஜையும், முக்கிய தினங்களில் விசேட பூஜைகளும் நாடும் உலகமும் நல்ல நிலைமைக்கு விரைவில் திரும்புவதற்கு விசேட பிரார்த்தனைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நிலைமை சீரான பிறகு தனி மனிதர் பரிகார பூஜைகள் தொடங்கும்

மற்றபடி, பக்தர்கள் நன்கொடையினை அறநிலையத்தின் வங்கிக் கணக்கிற்கு செலுத்தக் கோருகிறோம். நித்ய பூஜைகளுக்கும், விசேட பூஜைகளுக்கும், பசுக்கள் பராமரிப்பிற்கும் பொருளுதவி தேவைப்படுகிறது.

Cheque to be issued in favour of
**SATHGURU SRI SESHADRI SWAMIGAL BRINDAVANAM TRUST**
**Bank : ANDHRA BANK, A/c No. 159010100069912**
**IFS Code : ANDB0001590,** Madambakkam, Chennai - 126

# ஸ்ரீ வித்யா - ஒரு அபூர்வ வழிபாட்டு முறை

மெய்ப்பொருள் ஒன்றுதான். அதிலிருந்து உற்பத்தியானது தான் இந்த இரண்டு பிரிவுகள். ஆண், பெண், அசுர சக்தி, தேவசக்தி, நாஸ்திகம், ஆஸ்திகம் முதலியவைகளை உதாரணமாக கூறலாம். இங்கு ஆண் என்பதற்கு சிவபெருமானையும், பெண்ணிற்கு சக்தியையும் குறிப்பிடுகிறது. வேதகாலம் தொட்டு, சக்தி வழிபாடு என்பது இருந்து கொண்டுதான் இருக்கிறது. சக்தியையும், சிவனையும் இணைத்து அரூபமாகவும், யந்திர மூலமாகவும் அல்லது உருவம் கொடுத்து சிலைகளாகவும் சக்தியை வழிபட்டு வருகின்றனர். சிவன்-சக்தி இணைந்த வடிவமாக வழிபடுவது ஒரு முறை.

இந்த முறையிலிருந்து வந்ததுதான். ஸ்ரீ ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ வித்யா முறை. ஸ்ரீ ஆதிசங்கரர் ஒரு தத்துவ



ஞானியாவார். ஸ்ரீவித்யா என்பது ஸ்ரீ என்ற அம்பிகையின் ஆதிமெய்பொருளை உணர்ந்து கொள்ளுதல். அது நமது ஆன்மாவிற்கு விடுதலை கொடுக்க கூடிய, மோட்ச கதியை கொடுக்க கூடிய ஒரு பாதையாகும். அன்னையிலிருந்து உற்பத்தி ஆனதுதான் இந்த உலகம் என்பதை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது எந்த தேவதையை வழிபட்டாலும் இறுதியில் வந்து சேர்வது அம்பிகையிடம் தான். அம்பிகையையே ஸ்ரீ லலிதா மகாதிரிபுர சுந்தரியை இயந்திர வழிபாடு செய்வதுதான் ஸ்ரீ சக்ரம் என்று சொல்லக்கூடிய ஸ்ரீ சக்ர மகாமேரு. ஸ்ரீ சக்ரத்தின் வடிவமைப்பு யாராலும், எளிதில் புரிந்து கொள்ள இயலாத ஒரு அமைப்பாகும். ஸ்ரீ சக்ரம் ஒன்பது முக்கோணங்களை உடையது. நடுப்பாகம் தான் பிந்துவாகும். சக்ரத்தின் வட்டம், முக்கோணம், சதுரம் தளங்கள் ஆகியவைகள் உள்ளன. முக்கோணம், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், சாத்வீகம், ரஜஸ், தமஸ் போன்று மூன்றாக உள்ள சக்தியை குறிக்கிறது. முக்கோணம் மேல் நோக்கியிருப்பது சாதகனின் உயர்ந்த லட்சியத்தை குறிக்கிறது. முக்கோணம் கீழ்நோக்கியிருப்பது பராசக்தியின் அம்சமாகும். ஒரு முக்கோணம் மேல் நோக்கியும் ஒன்று கீழ் நோக்கியும் ஷட்கோணமாக இருப்பது சாதகனின் உயர்ந்த லட்சியத்தையும், இறையருள் அவனை நோக்கி வருவது குறிக்கிறது. மேல் நோக்கி இருப்பது சிவபெருமானையும், கீழ்நோக்கியிருப்பது சக்தியையும் உணர்த்துகிறது. முக்கோண வடிவம். அரூபமாக சிவனும், சக்தியும் இணைந்து சிவசக்தி ஐக்கியமாக காட்சி தருகிறது. சிவனும், சக்தியும் இணைந்து எல்லா சக்திகளையும் ஆட்டி படைத்து ஒரே சக்தியாக பராசக்தியாக காட்சி அளிப்பது முக்கோண வடிவத்தின் தத்துவமாகும். பிரதோஷ காலத்தில் ஸ்ரீ நந்திகேசுவரரின் இரு கொம்புகளுக்கு இடையே பஞ்ச சக்திகளும் ஒரே சக்தியாக இணைத்து ரிஷப வாகனத்தில் காட்சியளித்து கொண்டு அரும்பெரும் நாட்டியமாக உலகத்தையே ஆட்டுவித்துக் கொண்டும், நம்மை அரவணைத்து அருள்பாலித்து கொண்டிருக்கும் நாட்டியம்தான் வெட்டவெளி நாட்டியமாகும். அதையே ஆங்கிலத்தில் (Cosmic Dance) என்று சொல்லுவார்கள். முக்கோணத்தின் ஒவ்வொரு வடிவம், நமக்கு கோடானு கோடி தத்துவங்களை உணர்த்துகிறது. ஸ்ரீ சக்கரத்தை சுற்றி பதினாறு இதழ்களைக் கொண்டு கவிழ்ந்த தாமரைப்பூ ஒன்று விரிந்துள்ளது. ஒவ்வொரு இதழிலும் காமா கர்ஷினி முதல் பதினாறு ஆகர்ஷிணி தேவதைகள் வாழ்கின்றார்கள். இவர்கள் பக்தியுடன் தியானத்துடன் ஸ்ரீ லலிதா மகாதிரிபுர சுந்தரியை பூஜித்துக் கொண்டு வாழ்கிறார்கள். ஒவ்வொரு கோணத்திலும் ஒவ்வொரு தேவி அமர்ந்து அருள் பாலிக்கின்றாள்.

முக்கோணத்தின் மத்தியில் இருப்பது பிந்துவாகும். ஒவ்வொரு அடியாக வைத்து பிந்து ஸ்தானத்தை அடைவது என்பது ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை தரிசிப்பதாகும். ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை நவாவர்ண பூஜை மூலமாக தான் வழிபாடு செய்ய வேண்டும். ஆவரணம் என்பது நம் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அம்பிகையின் பாதத்தில் சமர்ப்பணம் செய்து நம் அறியாமை என்ற இருளை நாம் அகற்றுதல் வேண்டும். நம்மை முழுமையாக அர்ப்பணித்தால் தான் அந்த நிலையை அடைய முடியும்.

ஒவ்வொரு ஆவரணத்திலும் ஒரு தேவி அமர்ந்து நமக்கு அருள்பாலித்து கொண்டிருக்கிறாள். ஸ்ரீ சக்ரத்தின் ஒவ்வொரு கோணத்திலும் ஒரு முத்திரை இருக்கிறது. முதல் சக்ரத்தின் பெயர் பூபுரம், ஸ்ரீ மகாமேருவின் இச்சக்ரம் அமைய பெற்றால், கீழிருந்து ஆரம்பிக்க வேண்டும். இது மூன்று பகுதிகளாக பிரிகிறது. பூபுரம் வழியாகத்தான் ஸ்ரீ சக்ரத்திற்குள் நுழைய முடியும். இந்த சக்கரத்திற்கு பெயர் **த்ரை லோக்ய மோஹன சக்ரம்.** இச்சக்ரத்தின் வெளிபுறத்தில் சித்திகள் வாழ்கிறார்கள். இவர்கள் முறையே அனிமா, லகிமா, மஹிமா, ஈசித்வம், வசித்வம், ப்ரகாம்யம், புத்தி, இச்சா, ப்ராப்தி, ஸர்வகாம சித்தி முதலியவர்கள் ஆவார்கள். கண்ணுக்கு புலப்படாத புள்ளியாக இருப்பது அனிமா என்பது. ஒளிமயமாக இருப்பதுதான் லகிமா, உயர்ந்த தன்மையை உடையது - மகிமா, ஈசித்வம் என்பது கடவுள் தன்மையை உடையது. ஐம்புலன்களை அடக்குவது தான் வசித்வம், ப்ரகாம்யம் என்பது விரும்புவது கிடைப்பது. ஆனந்தத்தை அளிப்பது புத்தி; இச்சை என்பது விரும்புவது. ப்ராப்தி என்பது அடைவது. இறுதியாக நாம் விரும்பும் பொருள் அனைத்தையும் அடைவது ஸர்வாகமசித்தியாகும். நடுகோட்டில் இருப்பவர்கள். ப்ராஹ்மி, மாகேச்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்திரி, சாமுண்டி, மகாலக்ஷ்மி கடைசியில் இருப்பவர்கள்தான் 10 முத்திரை தேவதைகள். இவைகள் ஸர்வ ஸம்க்ஷோபிணி, ஸர்வ வித்ராவிணி, ஸர்வா கர்ஷிணி, ஸர்வ வசங்கரி, ஸர்வோன்மாதினி, ஸர்வ மஹாங்குசா, ஸர்வ கேசரீ, ஸர்வ பீஜா, ஸர்வ யோநி, சர்வ திரிகண்டா ஆகும். பத்தாவது முத்திரை தான் ஸர்வதிரிகண்டா, ஸ்ரீ சக்ரம் முழுவதற்கும் இந்த முத்திரை பொருந்தும்.

ஸ்ரீ சக்கரத்தில் இரண்டாவது ஆவரணத்தின் பெயர் **ஸர்வாஸா பரிபூரகம்.** பதினாறு இதழ் கமலத்தை கொண்டுள்ளது. ஜீவனின் ஸ்வப்னாவஸ்தையையும், ஸூக்ஷ்ம சரீரத்தில் இது அடையப்படும் அனுபவத்தையும் இவ்வாரணம் குறிப்பிடப்படுகிறது. பதினாறு இதழ் கமலத்திலுள்ள சக்திகளை குப்தயோகினிகள் எனப்படுவார்கள். அவர்கள் 1. காமாகர்ஷிணி 2. புத்யா கர்ஷிணி 3. அஹங்கார கர்ஷிணி 4. சப்தா கர்ஷிணி 5. ஸ்பர்சா கர்ஷிணி 6. ரூபா கர்ஷிணி 7. ரஸா கர்ஷிணி 8. கந்தா கர்ஷிணி 9. சித்தா கர்ஷிணி 10. தைர்யா கர்ஷிணி 11. ஸ்ம்ருத்யா கர்ஷிணி 12. நாமா கர்ஷிணி 13. பீஜா கர்ஷிணி 14. ஆத்மா கர்ஷிணி 15. அம்ருதா கர்ஷிணி 16. சரீரா கர்ஷிணி.

ஸ்ரீ சக்ரத்தின் மூன்றாவது ஆவரணம் **ஸர்வ ஸம்க்ஷோபனம்.** எட்டு இதழ் கமலத்தை கொண்டது. ஜீவனின் தூக்கம் அவஸ்தை, சரீரத்தில் அடையும் ஆனந்தம் குறிப்பிடப்படுகிறது.

அஹங்காரத்தையும், இந்திரியங் களையும் அடக்கினால்தான் செய்யும் தொழில் நன்றாக இருக்கும் என்ற தத்துவத்தை விளக்குகிறது. எட்டு இதழில் உள்ள குப்தயோகினிகள் முறையே 1. அனங்க குசுமா 2. அனங்க மேகலா 3. அனங்க மதனா 4. அனங்க மதனாதுரா 5. அனங்க ரேகா 6. அனங்க வேகினி 7. அனங்காங்குசா 8. அனங்க மாலினி ஆவார்கள்.

நாலாவது ஆவரணம் **ஸர்வஸௌ பாக்யதாயகம்** ஆகும். ஞானம், ஞேயம், ஞாதா என்னும் சித்சக்தியை உணர்வதே பிந்துவின் தர்ப்பணம். பதினான்கு சம்பிரதாய யோகினிகள் முறையே 1. ஸர்வ ஸம்க்ஷோபிணி 2. ஸர்வ வித்ராவிணி 3. ஸர்வா கர்க்ஷிணி 4. ஸர்வா ஹ்லாதினி 5. ஸர்வ

ஸம்மோஹினி 6. ஸர்வ ஸ்தம்பினி 7. ஸர்வ ஜ்ரும்பிணி 8. ஸர்வ வசங்கரி 9. ஸர்வ ரஞ்ஜினி 10. ஸர்வோன்மாதினி 11. ஸர்வார்த்தஸாதினி 12. ஸர்வ ஸம்பத்தி பூரணி 13. ஸர்வ மந்த்ரமயீ 14. ஸர்வ த்வந்த்வ க்ஷயங்கரி ஆவார்கள். ஆதி குருவும், ஜகத் காரணரும் ஆகிய பரமேஸ்வரர் பதினான்கு புவனங்களிலும் விளங்குவதை இவ் ஆவரணம் குறிப்பிடுகிறது. இதை காண்பதே சிறந்த ஸௌபாக்யமானதலால், இது ஸர்வ ஸௌபாக்யதாயகம் என்ற பெயர் பெற்றது.

ஐந்தாவது ஆவரணம் **ஸர்வார்த்த ஸாதகம்.** இந்த சக்கரம் 10 முக்கோணங்களை உடையது. எல்லா புனித தன்மையையும், ஐஸ்வர்யங்களையும் நிறைந்த வறுமையை நீக்கி, சகலவித சௌபாக்யங்களையும் செல்வத்தையும், வாரி வழங்கக் கூடிய பத்து கோணங்கள் இதில் இருக்கின்றன. பத்து கோணங்களுக்கு பத்து யோகினிகள் முறையே 1. ஸர்வ ஸித்திப்ரதா 2. ஸர்வ ஸம்பத்ப்ரதா 3. ஸர்வ ப்ரியங்கரி 4. ஸர்வ மங்கள காரிணி 5. ஸர்வ காமப்ரதா 6. ஸர்வ துக்க விமோசினி 7. ஸர்வ மிருத்யுப்ரசமனீ 8. ஸர்வ விக்னநிவாரணி 9. ஸர்வாங்க சுந்தரி 10. ஸர்வ ஸௌபாக்யதாயினி ஆகியவர்கள் ஆவார்கள்.

ஆறாவது ஆவரணம் : **ஸர்வ ரக்ஷாகரம்** உட்புறமாக உள்ள 10 முக்கோணங்களை உடையது. இதில் வீற்றிருக்கும் யோகினிகள் தீய சக்தியிலிருந்து நம்மை காப்பாற்றி அரவணைப்பதால் ஸர்வ ரக்ஷாகரம் என்ற பெயர் பெற்றது. இச்சக்திகளை நிகர்ப்ப யோகினிகள் என்று அழைப்பர். இவர்கள் முறையே 1. ஸர்வக்ஞா 2. ஸர்வ சக்தி 3. ஸர்வைஸ்வர்ய ப்ரதா 4. ஸர்வ ஞானமயீ 5. ஸர்வ வியாதி விநாசினி 6. ஸர்வாதார ஸ்வரூபா 7. ஸர்வபாபஹரா 8. ஸர்வானந்தமயீ 9. ஸர்வரக்ஷா ஸ்வரூபிணி 10. ஸர்வேப்ஸித பலப்ரதா ஆகியவர்கள் ஆவர்.

ஏழாவது ஆவரணம் : **ஸர்வ ரோகஹரம்** இச்சக்கரம் எட்டு கோணங்களை உடையது. அஞ்ஞானம் என்ற ரோகம் நமக்கு விலகும்போது ஞானம் என்ற பேரொளி கிடைக்கிறது. அந்த ஞானத்தை கொடுக்க கூடியது. நோய்களை போக்க கூடியது. அதனால்தான் இது ஸர்வரோகஹர சக்கரம் என்ற பெயர் பெற்றது. ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாமத்தை இயற்றிய வஸின்யாதி தேவதைகள் இங்கு வசிக்கின்றனர். இவர்கள் ஸ்ரீ லலிதா மஹாதிரிபுரசுந்தரியின் மிக அருகாமையில் உள்ள தேவியர்கள் ஆவார்கள். இவர்கள் எல்லோரும் அம்பிகையின் வாக்கில் வசிக்கக்கூடிய தேவியர்கள், வாக்தேவியர்கள் முறையே 1. வசினீ 2. காமேச்வரி 3. மோதினி 4. விமலா 5. அருணா 6. ஜயினீ 7. ஸர்வேச்வரி 8. கௌலினீ ஆவார்கள்.

எட்டாவது ஆவரணம் : **ஸர்வ ஸித்திப்ரதம்** என்று கூறப்படும். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஐக்கியப்படுவதால் ஸர்வஸித்திபிரதம் என்று கூறப்படுகிறது. இந்த ஸர்வரோகஹர சக்கரத்திற்கும் ஸர்வ சித்தி ப்ரத சக்கரத்திற்கும் இடையே உள்ள ஆயுத மண்டலம் ஆகும். இங்கே ஆயுத தேவதைகள் வசிக்கின்றனர். அவர்கள் அம்பிகையின் ஆயுதத்தை பாதுகாக்கின்றனர். இங்கு ஆயுதங்களான, பாசம், அங்குசம், கரும்பு, வில், பாணம் இவைகளின் தேவதைகள் இங்கு உள்ளனர்.

ஏழாவதிற்கும் எட்டாவதிற்கும் இடையில் மத்திய முக்கோணத்திற்கு மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு திசைகளில் முறையே பாணம், வில், பாசம், அங்குசம் என்ற அம்பிகையை ஆயுதங்களால் பூஜிக்கவேண்டும். இச்சக்ரம் முக்கோண வடிவத்தை உடையது. காமேஸ்வரி, வஜ்ரேஸ்வரி, பகமாலினி ஆகிய மூன்று கோணங்களும் முத்தேவதைகளைக் குறிக்கிறது. உள்ளே இருக்கும் முக்கோணம் வாக்பவா என்று அழைக்கப்படுகிறது. முக்கோணம் வாமா, ஜேஷ்டா, ரௌத்ரியை முறையாக ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரனைக் குறிக்கிறது. இந்த முக்கோணம் இச்சா, ஞானம், கிரியா சக்திகளைக் குறிக்கிறது. ஒரு வேலையை செய்ய வேண்டும் என்ற உந்துதல் தான் இச்சாசக்தியாகும். அந்த வேலையைப் பற்றிய அறிவை கொடுப்பதுதான் ஞானம். இது இரண்டும் இருந்தால் தான் அந்த வேலையை செய்யமுடியும். அதுதான் கிரியா சக்தி.

**ஸ்ரீ சக்ரத்தின் நடுவிலுள்ள புள்ளியே பிந்து. அதுதான் ஸர்வானந்தமயம்.** உலகநாயகியான ஸ்ரீ லலிதா மகா திரிபுர சுந்தரியும், ஸ்ரீ காமேஸ்வரனும் இணைந்து கணவன், மனைவியாக இங்கிருந்துதான் உலகையே ஆட்டி படைத்து கொண்டிருக்கின்றனர். பிந்து என்கிற ஒரு சிறிய வட்டம் இங்கு சிவசக்தி ஐக்கிய ரூபத்தை குறிக்கிறது.

இறுதியில் சிவன் ஜடப்பொருளாக இருந்து சக்தி இயங்கும் பொருளாக இருந்து அந்த சக்தியை வெட்ட வெளியிலிருந்து வெளி உலகத்திற்கு வெளிப்பாடு செய்வதாக இந்த பிந்து ஸ்தானம் அமைந்துள்ளது. ஸ்ரீவித்யாவின் உச்சகட்ட நிலையை அடைவது தான் பிந்துவை அடைவதாக குறிப்பிடப்படுகிறது. பிரகாசம், விமர்சம், பரா அகந்தை மூன்றும் சேர்ந்தது தான் பிந்து இருக்கும் முக்கோணம் ஆகிறது. உலகையே ஆட்டிவைக்கும் இந்த சக்திக்கு தான் ஸ்ரீ மகேஸ்வரி சக்தி என்று பெயர்.

வெளி கோபுரத்திலிருந்து மையமாக நடு நாயகமாக இருக்கும் பிந்துவை அடைவதற்கு, மனிதன் தனது சக்தியையெல்லாம் திரட்டி மூலாதாரமான குண்டலினி யோகத்தில் சகஸ்ரதள பத்மத்தில் வீற்றிருக்கும் ப்ரம்மனை நினைத்து தவம் செய்தல் வேண்டும். ஸ்ரீ வித்யா முறையில் ஸ்ரீ சக்ரத்தை அல்லது மஹா மேருவை நவாவர்ண பூஜை மூலம் வழிபடுபவர்கள் தன்னுடைய உடலையே (அம்பிகையின்) வாஸஸ்தலமாக ஸ்ரீ புரமாக்கி ஆத்ம விசாரணை செய்து தன்னையே உணர வேண்டும். அம்பிகையை வழிபடும் போது ஸ்ரீ வித்யா உபாசகர் தன்னுடைய உடலையே வருத்தி அந்த வேள்வித்தீயில் தியாகம் செய்து பின் சிவசக்தி அருளால் புதிய உடலை எடுத்து கொள்கிறார். உபாசகன் அம்பிகையின் முன் தன்னையே பெண் ரூபமாக உருவகப்படுத்தி பூஜை செய்கிறார். தன்னுடைய சக்தியெல்லாம் திரட்டி மூலாதாரத்தை அடைய நினைப்பது சிவசக்தி ஐக்கிய சொரூபமாக உள்ள பிந்துவையும், வெளியே உள்ள எட்டு சக்ரமான ஸ்ரீ சக்ரத்தையும் அடைவதற்கு ஒப்பாகும்.

மத சடங்குகள் மூலமாகவும், தத்துவ சாஸ்திர மூலமாகவும், எந்த முறையில் வழிபட்டாலும், ஸ்ரீ வித்யா உபாசகர், விதிமுறைகளுக்கு உட்பட்டு, காம, குரோத, லோப குணங்களை வெல்லுதல் வேண்டும். மந்திரங்களை உச்சாடனம் செய்யும்போது மின் அலைகளை செலுத்தி பார்க்கும்போது, ஸ்ரீ சக்கரம் உற்பத்தியாவதை ஆராய்ச்சி பூர்வமாக, மேற்கத்திய ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்து உள்ளார்கள். இந்த நிகழ்ச்சியை புகைப்படமாக எடுத்தும் வெளியீட்டு உள்ளார்கள்.

உண்மையான பக்தியும், நேர்மையான முறையில், விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு செய்தால் இவ்வகையான வழிபாட்டை யார் வேண்டுமானாலும் செய்யலாம். இதற்கு ஜாதி, மத, இன, மொழி, வேறுபாடு ஒன்றும் கிடையாது. இதில் முக்கியமானது என்னவென்றால், உபாசகர்கள் முழுநம்பிக்கை வைத்து, தன் குருவின் சொல்படி நடத்தல் வேண்டும். இது ஒரு சாதாரண காரியமல்ல. சாதகனுக்கு பலவிதமான சோதனைகள் இருக்கும். அனைத்தையும் அவன் தன் குருவின் கருணையினால் மட்டுமே கடக்க முடியும். இதில் குருவின் கடாட்சம் முக்கியமாக தேவை. குரு காட்டிய பாதையில் சிறிதும் பிறழாமல் நடந்தால் இதை அடையமுடியும். **இப்படிப்பட்ட கடுமையான பாதையில் நெறி தவறாமல் வாழ்ந்து, தன்னையே அர்பணித்துக்கொண்ட ஸ்ரீ வித்யா பரம்பரையை சேர்ந்தவர் தாம் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள். ஸ்ரீ வித்யா தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மகான் சூட்சுமத்தில் கூறியபடி உருவாகிய பீடம்தான் இந்த சக்திபீடம். ஸ்ரீ வித்யா பரம்பரையை சார்ந்த ஸ்ரீ காமகோடி சாஸ்திரிகள் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளிடம் ஒப்படைத்தார். ஸத்குரு, பராபாகுரு, அவரிடமிருந்து பூக்கடை சுந்தரேச ஸ்வாமிகளிடம் சென்றது. அவர் பரமேஷ்டி குரு. அவருடைய சிஷ்யர் ஸ்ரீ நாக சுப்ரமணிய சாஸ்திரிகளிடம் (பரமகுரு) ஒப்படைத்தார். அவர்தன் சிஷ்யை ஸ்ரீமதி விசாலாட்சி சுவாமிநாதனிடம் (குரு) ஒப்படைத்தார். அவரிடமிருந்து குருஜி சர்மா அவர்கள் ஏற்றுக் கொண்டார்.**

குரு பரம்பரை பயணம் இன்றும் தொடர்கிறது. பராபர குருவாக ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் இருக்க, அவருடைய பிரதான சீடர் குருஜி கே.வி.எல்.என். சர்மாஜி அவர்களுடன் அந்த சங்கிலித் தொடர் பிணைக்கப்பட்டு, நகமும் சதையும் போல் இணைந்து செயல்பட்டு கொண்டிருக்கிறது.

ஆகையால்தான், இப்படிப்பட்ட ஒரு பேரருள் கிடைத்த காரணத்தினால், எட்டு விதமான சித்துகளையும் தன்னுள்ளே அடக்கியுள்ள, உலகத்திலேயே முதன்மையான பச்சைக்கல் ஸ்ரீ சக்ர மஹாமேருவிற்கும், சித்தர்களுக்கும் ஆலயம் கட்டப்பட்டு, இரண்டு குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்று, சடங்குகளுக்கு அப்பாற்பட்ட ஒரு முறையாக இளையவருக்கும், வறியவருக்கும் அருளை வாரி வழங்கக்கூடிய ஒரு திருத்தலமாக இந்த சக்திபீட பிருந்தாவனம் விளங்குகிறது.

**"ஒரே சக்தி பராசக்தி"**

*எமது வெளியீடு : ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மஹாத்மியத்திலிருந்து...*

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006

# அபிராமி அந்தாதி விளக்கவுரை

கடந்த சேஷ ஒளியில் அபிராமி அந்தாதியின் 6ஆம் செய்யுளின் விளக்கவுரை வரை கண்டோம். இப்பொழுது முறையே 7,8, 9ஆம் செய்யுள்களின் விளக்கவுரையை இச்சுடரில் காண்போம்.

**7ஆம் செய்யுள்:**

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும், வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே!

தயிரை கடையும் மத்து போன்று சுழன்று கொண்டிருக்கிற எனது உயிர், நல்லதொரு மோட்ச கதியை அடைவதற்கு அருள் தருவாய் அம்மையே! தாமரை மலரில் உதித்தவரும் அறிவின் திருவுருவான கலைவாணியை கண்டு மகிழும் பிரம்மன் மட்டுமல்லாது திருமாலும் போற்றி வணங்குகின்ற செம்பாதங்களையுடைய, செந்தூரத் திலகம் தரித்த சுந்தரியே, எம்மை காப்பாய் தாயே.

**8ஆம் செய்யுள்:**

சுந்தரி, எந்தை துணைவி, என் பாசத்தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்ந்தாள் என் கருத்தனவே.



சுந்தரியாகிய என் அபிராமி அம்மை, எம் தந்தையாகிய சிவபெருமானின் துணைவியாவாள். செந்நிற திருமேனிகொண்ட அந்த தாய், பந்த பாசங்களில் முற்றும் மூழ்காமல் நம்மை காக்கும் பராசக்தியாவாள். மகிஷாசுரனின் தலைமேல் நின்று அவனை வதம் செய்த நீலநிறமுள்ள நீலி என்னும் கன்னிகையே/பிரம்ம கபாலத்தை கையில் கொண்டுள்ள பேர் அருளே! மென்மையான உனது மலர்த்தாளை மட்டுமே/ என்றும் நான் என் கருத்தில் கொண்டுள்ளேன்.

**9ஆம் செய்யுள்:**

கருத்தன, எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர் அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கை சிலையும், அம்பும்
முருத்தன மூரலும், நீயும் அம்மே வந்து என் முன் நிற்கவே.

**விளக்கம்:**

என் கருத்தில் விளங்குகின்ற அபிராமித்தாயே/என் அய்யன் சிவனுக்கு நீ கண்ணாகத் திகழ்கின்றாய்/வண்ணக் கனகவல்லி என்று போற்றப்படும் நீ, அன்று உன் நெஞ்சகத்திலிருந்து வற்றாது சொரிந்த பாலை, அமுதப் பிள்ளையாகிய ஞான சம்பந்தருக்கு நல்கினாய், அத்தகைய அருள் ததும்பும் இதயத்தோடு இருக்கின்ற என் அம்மை இன்று என் முன், ஆரம் தரித்து சிவந்த கைகளில் வில்லும் அம்பும் ஏந்தி, பவளச் செவ்வாயில் புன்னகை சிந்தி, காட்சி தர வேண்டும் அம்மா.

(தொடரும்)

உமாபரணி

# ஸ்தல விருட்சம்

ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு ஸ்தல விட்சம் இருப்பது ஐதீகம். இத்தலத்தில் பஞ்ச சக்திகள் ஆன நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய சக்திகள் ஒன்றாகத் திரண்டு அமையப்பெற்றது, ஐந்து ஸ்தல விருட்சமாக அமையப் பெற்றதே இக்கோவிலின் சிறப்பு அம்சம்.

நான்குபுறம் வேம்பு, நடுவில் நாகலிங்க மரம், வேப்ப மரங்கள் நீர், நிலம், நெருப்பு, காற்று என்ற நான்கு சக்திகளையும், நாகலிங்கமரம் ஆகாய சக்தியாக, சிதம்பரத்தில், ஆனந்தக் கூத்தாடி நடனமாடும் சிவபெருமானைக் குறிக்கிறது.

வேம்பு சக்தியின் அம்சமாகவும், நாகலிங்கம் சிவ அம்சமாகவும் கருதப்படுகிறது. ஆகையால் சிவனும் சக்தியும் இணைந்து சதாசிவ மஞ்சப் பலகையாகவும், ஸ்ரீ சக்ர மகாமேருவாகவும் காட்சியளிக்கின்றனர். கருவறையில் காணும் காட்சிக்கு சாட்சியாக ஸ்தல விருட்சங்கள் இருக்கின்றன.

ஸ்தல விருட்சங்களும், ஸ்ரீசக்ர மகாமேருவின் அமைப்பும், சிவனும், சக்தியும் இணைந்து, எல்லா சக்திகளையும் ஆட்டிப் படைத்து ஒரே சக்தியாக, பராசக்தியாக இங்கே காட்சியளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இதன் மூலம் பஞ்சாட்சர மகிமையையும், பஞ்ச சக்திகளின் பெருமைகளையும், சிவ சக்தி ஐக்கிய தத்துவமும் வெளிப்பட்டு பிரபஞ்சத்தைக் காக்கும் பராசக்தியாகக் காட்சியளிக்கிறது.

கோவிலைச் சுற்றி அரணாக, இயற்கையாகவே அரிய பல பலன்களைத் தரும் வேப்ப மரங்கள் அமைந்துள்ளன. கோவில்களில் இறைவனை வலம்வந்து வணங்குவது போலவே இந்த ஸ்தல விருட்சங்களையும் வலம் வருவது நற்பலனைத் தரவல்லது என்பது ஐதீகம். வேப்பந்தருவின் காற்று அனைத்து நோய்களையும் போக்கி மனவளத்தையும் உடல் வளத்தையும் தருகின்றது. இதுபோன்று அரிய பலன்கள் பல தருவதால்தான். நம் முன்னோர்கள் கோவில்கள் பலவற்றிலும் ஸ்தலமரம் அதாவது ஸ்தல விருட்சம் என்று மரங்களை வளர்க்கும் பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள் போலும்.

இந்த ஸ்தல விருட்சத்தை 9 முறை வலம்வந்தாலே பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தரிசித்த பலன் கிட்டும். தோஷம் உள்ளவர்கள் இவ்விருட்சத்தை வலம் வந்தால் தோஷம் நீங்கும். புத்திரபேறு இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். தீராத கடன் தொல்லையால் அவதிப்படுபவர்கள், அவற்றிலிருந்து விடுபடுவர். கல்விச் செல்வமும், பொருள் செல்வமும் பெருகும். முன்வினை கர்மவினை அகலும்.

- குருஜி

**ஸ்ரீ சேஷ ஒளி**

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
முரளி சுந்தரம்

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

**டிரஸ்டின் வெளியீடுகள்**

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.